RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL

சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt2224s1919

OPEN ACCESS

# ஐங்குறுநூறு உணர்த்தும் அறச்சிந்தனைகள்

ந. ஜெய்ஸ்ரீ [அ, *]

[அ] தமிழ்த்துறை, அரசினர் மகளிர் கலைக்கல்லூரி, சேலம்-636008, தமிழ்நாடு, இந்தியா

# Moral Thoughts in Ainkurunuru

N. Jaishree [a, *]

[a] Department of Tamil, Government Arts College for Women, Salem-636008, Tamil Nadu, India

* Corresponding Author: jaishreen1998@gmail.com

Received: 02-08-2022
Revised: 27-09-2022
Accepted: 05-10-2022
Published: 10-12-2022

Check for updates

## ABSTRACT

Sangam literature is the foremost and the oldest literature in Tamil. Sangam literature is an ark of ideas that depicts many aspects of life like love, valor, war, business and agriculture of ancient Tamils. Sangam literature is divided into two categories as song and sum. Although the song books explain the good deeds of Tamil people, the sum books also explain the good deeds in the unique way. When a person leads a virtuous life, it will bring an everlasting happiness. Same way a person experiences boring life when he leads his life in a non-virtuous way. Therefore, there is no doubt that having good moral behavior is the best thing for man. This article reveals the moral thoughts that has been followed in the lives of ancient Tamils through Ainkurunuru, which is one among the Ettuthogai.

**Keywords:** Ainkurunuru, Moral Thoughts, Sangam Literature, love, valor, business, war, Agricultur

## முன்னுரை

தமிழ்மொழியில் தோன்றிய இலக்கியங்கள் பெரும்பாலும் நாற்பொருள் பயப்பனவாகவே அமைந்துள்ளன. அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கில் நான்கையுமோ அல்லது மூன்றையோ, இரண்டையோ, ஒன்றையோ கொண்டு தமிழில் இலக்கியங்கள் படைக்கும் மரபு வழிவழியாக பின்பற்றப்படும் நூல் மரபாக உள்ளது. இவற்றில் பொருள், இன்பம், வீடு ஆகியவை இல்லாது தமிழில் படைப்புகள் இருக்கலாம். ஆனால் அறமின்றி எவ்விலக்கியமும் தமிழ் பரப்பில் இல்லை எனும் அளவிற்கு அறத்துடன் தமிழ் இலக்கியங்கள் நெருங்கிய தொடர்புக் கொண்டிருக்கின்றன. எனவே, தமிழில் தோன்றிய பெரும்பாலான இலக்கியங்கள் அறத்தின் பாற்பட்டவை என்பதில் ஐயமில்லை. தமிழில் சிறந்து விளங்கிய சங்கப்பாக்களும் அறச்சிந்தனையை எடுத்துரைப்பதாகவே உள்ளது. சங்க இலக்கிய நூலான ஐங்குறுநூறும் பொது அறம், ஈகை, மன்னரின் போரறம் எனப் பல அறங்களை தன்னகத்தே கொண்டு சங்க அகமாந்தர்களின் அறநெறியைப் புலப்படுத்துவதாக விளங்குவதை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## அறம்

மனித வாழ்வில் இரண்டறக் கலந்த காதலும், வீரமும் அடித்தளங்களாக இருப்பினும் இவைகளின் ஊடே சொல்லப்படும் கருத்துக்கள் யாவும் அறம் என்னும் நெறியை இலைமறைக் காயாக கொண்டே நெடுங்காலமாக விளங்கி வருகிறது. தனிமனிதன், ஒரு குடும்பம், குழு, அரசு எனக்

கட்டமைக்கப்பட்ட இச்சமூகம் சிறப்பாக வாழ வழி வகுப்பது அறமாகும். அதனால்தான் இலக்கியத்தைப் படைக்கும் படைப்பாளியும் அதனுள் ஒரு நீதியை வைக்கிறான். அறம் என்பது மனித வாழ்வின் உயர்மதிப்பீட்டு விழுமியங்களை உருவாக்குவதாக அமைகிறது. அவ்விழுமியங்கள் மரபினருக்குத் தொடர்ந்து வழிவழியாக கற்பிக்கப்படுகிறது.

## அறம் - சொல்லும் பொருளும்

அறு + அம் = அறம். அறுக்கப்பட்டது. மனித வாழ்வில் இன்னின்ன செய்கை செய்தல் வேண்டும், தவிர்த்தல் வேண்டும் என வரையறுத்துக் கூறுவது அறமாகும்.

“அறு - அம் என்பது ‘அறம்’ எனல் ஆயிற்று. ‘அறு’ எனும் பகுதிக்கு ‘முடிவு செய்’ என்னும் பொருள் உண்டு. ஒன்றன் நன்மை, தீமையை முடிவு செய்து அதற்கேற்ப ஒழுகுதல் என்ற நிலையில் அறம் எனலாயிற்று எனலாம். அறி, அறிவு, அறுதி போன்றனவும் இதனுடன் தொடர்புடையனவாக அமைதல் குறிப்பிடத்தக்கது. ஒன்றன் இயல்பினை அறுதியிட்டு, அறிவுறுத்தி நல்ல ஆற்றுப்படுத்துலாக அமைதலின் அறமாயிற்று” என்ற கருத்து நோக்கத்தக்கது (Sivagami, 1991). இக்கருத்திலிருந்து ஒன்றின் நன்மை, தீமையை ஆராய்ந்து நன்மை வழி நடப்பதே அறம் என்பது புலப்படுகிறது.

வள்ளுவரும் அறத்தினால் ஏற்படும் நல்வினை, இன்பம், மேன்மை எனப்பல கருத்துகளை உள்ளடக்கிய ‘அறன் வலியுறுத்தல்’ என்னும் அதிகாரத்தின் வாயிலாக அறத்தின் இன்றிமையாமையை விளக்குகிறார்.

“மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்து அறன்

ஆகுல நீர பிற”

என்ற இக்குறட்பா மனதில் மாசுக்கள் இல்லாததே அறம் என்பதே எடுத்துரைக்கிறது (Murugan, 2014). மேலும், “அறம் என்பது ஏதோ ஒரு நீதியை உணர்த்தும் பொருட்டுப் பயன்படுத்தப்பெற்ற சொல் என்பதைவிட, அச்சொல் பழந்தமிழர் பண்பையும், உயர்ந்த நெறியையும், வாழ்வியல் தத்துவத்தையும் உணர்த்திப் படிப்படியாக அச்சொல் இவ்வுலகத்திற்கு நல்வழி காட்டி, உலக மக்களால் பெரிதும் போற்றப் பெறுவதாகிய இறையாற்றலையே உணர்த்த வல்ல ‘செஞ்சொல்’ (இராமலிங்கம். 2003) என்று விளக்கம் கூறப்படுகிறது (Ramalingam, 2003).

இவ்வாறு அறம் என்பது மனித வாழ்வோடு இரண்டறக் கலந்த அடித்தளமாகும் என்பது அறியப்படுகிறது. அகவாழ்வானும், புறவாழ்வானும் அறமே இதன் அடிப்படை. இது தமிழர்களின் வாழ்வில் சிறப்புப் பெற்ற சொல் எனில் அது மிகையாகாது.

## அறத்தின் தோற்றமும் நோக்கமும்

சங்க காலமாயினும், இக்காலமாயினும் சமுதாயத்தில் மனிதப்பிறவி வாழ்வாங்கு வாழ அறவழிப் பாதையே இன்றிமையாததாகக் கூறப்படுகிறது. ஒரு தனிமனித வாழ்க்கைக்கு அறநெறி என்பது மிக முக்கிய பண்பாகும். நாம் விண்ணுலகத்தில் நல்ல பயனை அனுபவிக்க மண்ணுலகில் அறநெறியின் கீழ் செயல்பட வேண்டும் என்பதே நம் முன்னோர்களின் வாக்காக இருந்தது.

அறமும் மனித வாழ்வும் வரலாறும் ஒன்றுடன் ஒன்று பின்னிணைக்கப்பட்டதாகும். மனித வாழ்க்கை எவ்வாறு மாறுதல் அடைந்து படிப்படியாக முன்னேறி தேவையான மாற்றம் பெற்று வளர்கிறதோ அதேபோல் தான் அறநெறியும் உடன் வளர்கின்றது. ஆதிமாந்தர்களின் வாழ்க்கையில் இதுதான் அறப்பண்பு எனத் துல்லியமாக கூற இயலாமல் இருப்பினும் சில அறக்கூறுகள் காணப்படுகின்றன. அக்கூறுகள் இயற்கை விருப்பத்தின் தூண்டல்களாகவும், சமுதாயக் கட்டுப்பாட்டின் விளைவுகளாகவும் அமைந்துள்ளது. நல்லது, கெட்டது என ஆராய்ந்துப்பார்க்கும் பகுத்தறிவினால் மனிதனுக்கு கிடைத்த சிறந்தக் குணங்களில் ஒன்று அறம் என்பதை நாம் மறுக்க இயலாது.

பழங்கால மக்கள் பசி, பிணி, பகை, வறுமை ஆகிய வாழ்க்கைப் போராட்டங்களிடையே இன்பமும், பொருளும் பெறப் பல்வேறு வழிமுறைகளையும், நெறிமுறைகளையும் பின்பற்றி இருக்கிறார்கள். இந்நெறிகளில் பிறருக்குத் தீங்கு செய்யாத செயல்கள் அனைத்தும் நல்லநெறியிலேயே ஒழுக்கங்களுக்கு கட்டுப்பட்டதாகவும், கடமை உணர்வாகவும் மக்களிடையே வளர்ந்து ஏற்றுக் கொள்ளப்பட்ட மரபு ஒழுக்கமாகவே இன்றளவும் விளங்குகிறது. இவ்வாறு பின்பற்றப்பட்ட ஒழுகலாறுகள் 'அறம்' எனப் புலவர்களால் போற்றப்படுகிறது. இலக்கியத்தின் மிக முக்கிய பாடுபொருளாக அறம் பங்கு பெற்று மனித வரலாற்றின் தோற்றத்தின் ஒருங்கிணைந்து செயல் ஆற்றுகிறது.

ஒவ்வொரு மனிதனும் பொதுநலம் கருதி நல்லனவற்றைச் செய்ய வேண்டும். கல்வியறிவு, கல்வியால் வரும் நல்லொழுக்கம், சமூகக் கட்டுப்பாடு என இவற்றின்அடிப்படையில் செயல்பட வேண்டும். ஒவ்வொரு மனிதனும் இவற்றை பின்பற்றும்போது படிப்படியாக சமுதாயம் சீரடைகிறது.

"செயற்பாலது ஓரும் அறனே ஒருவற்கு

உயற்பால தோரும் பழி"

மனிதன் தன் வாழ்க்கையின் நோக்கமாகவும், குறிக்கோளாகவும் கொண்டுச் செய்யத்தக்கது அறமேயாகும். பழிக்கத்தக்க செயல்களைச் செய்யாமல் பாராட்டத்தக்க அறவழிச் செயல்களைச் செய்யும் மனிதனுக்கே புகழ் உண்டாகும் என வள்ளுவர் கூறுகிறார் (Murugan, 2014).

அறிவும், ஒழுக்கமும் உடைய சான்றோரின் ஒழுகலாறுகளை முன்மாதிரியாகக் கொண்டு வாழ்தலே மனிதனுக்குரிய கடமைகளுள் ஒன்று. ஒழுக்கமுடைய சான்றோரை எடுத்துக்காட்டாகக் கொண்டு அவர்கூறும் அறநெறி வழிவாழ்தலே வாழ்வில் மேன்மை தரும். கடமை சமூகத்தில் தான் பிறக்கிறது தத்தங் கடமைகளைத் தன்னலங் கருதாது செய்யும் சமூகமானது அறவழியில் உயர்வடையும். ஒழுக்கத்தின் வளர்ச்சியும் அறத்தின் நோக்கங்களுள் ஒன்றாகக் கருதப்படுகிறது.

"கட்டமை ஒழுக்கத்துக் கண்ணுமை யானும்"

தொல்காப்பிய பொருளதிகாரப் புறத்திணையியலில் வாகைத் திணையின் துறைகளைக் கூறும் தொல்காப்பியர் அவற்றை மறத்துறை, அறத்துறை என இரண்டாகப் பகுத்து ஒவ்வொரு துறையிலும் ஒன்பது செய்திகளை விளக்குகிறார். அறத்துறை என்பது நீதி சார்ந்து வாழ்வது. சிறந்த ஒழுக்கத்தை உடைய மனிதனின் நோக்கமானது அறநெறியில் நின்று நன்மை பயக்கும் என்பதை தமிழ்ச் சான்றோர்கள் பலவகைகளில் புலப்படுத்தி உள்ளனர் (Subash Chandrabose, 2018).

## இலக்கியமும் அறமும்

இலக்கியங்கள் படைக்கப்படுவதே மனிதனை மனிதனாக வாழ வழிகாட்டுவதற்கும், அவனுடைய வாழ்வை செம்மைப்படுத்தி உயர்த்துவதற்கும் ஆகும். அன்றையக்காலம் முதல் இன்றையக்காலம் வரையில் தமிழரிடம் உயர்ந்தப் பண்பாக இவ்வறப்பண்பு விளங்குகிறது. பண்டைய தமிழரின் வாழ்வியல் பாகுபாடுகளாகிய இவ்வகமும், புறமும் அறத்தின் அடிப்படையில் அமைந்தது. தொல்காப்பியர் ஐந்திணைக்குரிய ஒழுக்கங்களை குறிப்பிடும்பொழுது,

"இன்பமும் பொருளும் அறனும் என்றாங்கு

அன்பொடு புணர்ந்த ஐந்திணை"

என்று குறிப்பிட்டள்ளார் (Subash Chandrabose, 2018). களவு வாழ்விலும், கற்பு வாழ்விலும் பண்டைத் தமிழர் அறநெறிகளை போற்றி வாழ்ந்து வந்துள்ளனர்.

"அறமெனப் படுவ தியாதெனக் கேட்பின்

மறவா திதுகேள் மன்னுயிர்க் கெல்லாம்

உண்டியு முடையு முறையுளு மல்லது"

என்ற பாடலில் மனிதர்களுக்கு உணவு, உடை, உறையுள் அளிப்பதே முதன்மையான அறம் என்று வலியுறுத்துகிறது (Somasundaranaar, 2009).

தொல்காப்பியம் பண்டைய தமிழரின் வாழ்க்கை அறங்களை வகுத்துக் கூறும் வாழ்விலக்கணம். பிறரறியாது வாழ்ந்த களவு வாழ்விலும், இல்லறம் ஏற்று வாழ்ந்த கற்பு வாழ்விலும் தமிழர் போற்றிய அறநெறிகளை அகப்பொருள் இலக்கணம் புலப்படுத்துகிறது. புறப்பொருள் வெண்பாமாலை போரறத்தைத் தெளிவுப்படுத்துகின்றது. நீதிநூல்களின்தொகுப்பு என்றழைக்கப்படும் பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் மனித வாழ்விற்குத் தேவையான இல்லறம், துறவறம் என்ற இரு முக்கியக் கூறுகளின் வழி அறத்தை விளக்குகிறது. மேலும், ஐம்பெருங்காப்பியம், ஐஞ்சிறுகாப்பியம் என்று தமிழ் இலக்கிய உலகில் படைக்கப்பட்ட அத்துணை படைப்புகளும் ஏதேனும் ஓர் அறத்தை நிலைநிறுத்துவதாகவே விளங்குகின்றன.

## ஐங்குறுநூறு

சங்க இலக்கியமாகிய எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று ஐங்குறுநூறு. ஐந்திணை ஒழுக்கங்களைத் தனித்தனியே நூறுநூறு பாடல்களாகக் கொண்டு இந்நூல் உருவாக்கப்பட்டுள்ளது. மூன்றடிச் சிற்றெல்லையும், ஆறடிப் பேரெல்லையும் கொண்ட இந்நூல் ஐந்நூறு பாடல்களைக் கொண்டது. ஐங்குறுநூறு நூலைத் தொகுத்தவர் புலத்துறை முற்றிய கூடலூர் கிழார் என்றும், தொகுப்பித்தவர் யானைகட்சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறை என்றும் கண்டறிய முடிகிறது. இந்நூலிற்கு கடவுள் வாழ்த்துப் பாடியவர் பாரதம் பாடிய பெருந்தேவனார், பாடப்பட்டவர் சிவபெருமான் ஆவார்.

## ஐங்குறுநூற்றின் அமைப்பும், பாடியோரும்

ஐங்குறுநூற்றைப் பாடிச் சிறப்பித்த பெரும்புலவர்களின் பெயரை பழம்பாடல் ஒன்று தெரிவிக்கிறது.

"மருத மோரம் போகி நெய்தல் அம்மூவன்

கருதும் குறிஞ்சி கபிலன் - கருதிய

பாலையோத லாந்தை பனிமுல்லை பேயனே

நூலையோ தைங்குறு நூறு"

என்ற பாடலானது ஐங்குறுநூற்றில் அமைந்துள்ள மருதம், நெய்தல், குறிஞ்சி, பாலை, முல்லை என்ற திணையமைப்பு முறையினையும், அவற்றை பாடிய புலவரையும் தெரிவிக்கிறது. மருதத் திணையை முதலாவதாகக் கொண்டு பாடப்பட்ட ஒரே தொகை நூல் ஐங்குறுநூறு ஆகும் (Somasundaranaar, 2009).

சங்கப்பாடல்கள் அனைத்தும் ஒன்றோடு ஒன்று தொடர்பில்லாத தனிப்பாடல்களாக இருப்பினும் பத்தாகப்பாடும் முறையினைப் பதிற்றுப்பத்திலும், ஐங்குறுநூற்றிலும் காண முடிகிறது. ஐங்குறுநூற்றில் திணைக்குப் பத்துப்பத்து என்ற எண்ணிக்கையில் ஐம்பது பத்துகள் காணப்படுகின்றன. பத்துப்பத்தாகப் பாடப்பட்ட பாடல்களுக்கு ஒரு பெயரும் இடப்பட்டுள்ளது. சொல் விளி, முதல், கரு, உரிப்பொருட்கள், கூற்று ஆகியவை அடிப்படையில் பெயர் அமைகின்றன.

ஐந்து பெரும்புலவர்களும் தங்கள் பாடல்களின் வாயிலாக, களவு, கற்பு என இருநிலைகளிலும் தலைவன், தலைவி, தோழி, நற்றாய், செவிலி, பாணன் முதலிய அகமாந்தர்களின் கூற்றுகள் வழியாக அறச்செய்திகளை திறம்படக் கூறிச் சிறப்பித்துள்ளனர்.

## பொது அறம்

சமுதாயமாகக் கூடி வாழும் மக்கள் ஒட்டுமொத்த சமூகத்திற்கு சிறப்புச் சேர்க்கும் வகையில் பலவித அறங்களைச் செய்வதுண்டு. அவ்வாறு செய்யப்படும் அறங்கள் தனிமனித அறங்களை உள்ளடக்கிய சமுதாய அறமாகவும், பொது அறமாகவும் பார்க்கப்படுவதுண்டு. “ஒவ்வொரு குடும்பமும் வறுமையின்றி நன்றாக வாழ வேண்டும். எல்லாக் குடும்பங்களிலும் உணவுப் பொருள்களும் ஏனைய செல்வங்களும் ஏராளமாக இருக்க வேண்டும். இல்லற தர்மம் இனிது நடைபெற்று எல்லோரும் இன்புற வேண்டும். நாட்டிலே விளைப் பொருள் பெருக வேண்டும். உழவுக்கும், மக்கள் அருந்துவதற்கான பாலுக்கும் பயன்படும் மாடுகள் செழித்திருக்க வேண்டும். மக்கள் நோயின்றிப் பசியின்றி மகிழ்ந்து வாழ வேண்டும். இவை பண்டைத்தமிழ் மக்களின் கொள்கை. இக்கொள்கையைச் சில ஐங்குறுநூறு பாடல்கள் விளக்குகின்றன” என்று ஐங்குறுநூற்றின் அறச்சிறப்பை குறிப்பிட்டுச் சொல்கிறார் (Chidambaram, 2008).

மன்னனை மக்கள் இறையெனக் கருதி வாழும் மரபை பண்டைய தமிழினர் கொண்டு இருந்தனர். இம்மரபை அடியொற்றியே ஐங்குறுநூற்றின் மருதத்தில் அமைந்த முதல் பத்தான ‘வேட்கைப்பத்து’ முழுவதும் அரச வாழ்த்தாக அமைந்திருப்பது இந்நூலின் தனிச்சிறப்பாகும். அதன் அவினி என்னும் சேர மன்னனை வாழ்த்தும்போதே அவன் ஆளுகைக்குட்பட்ட நாட்டுவளம், வேளாண்மை, இரவலருக்கு கொடுத்தல், அறம் சிறந்து விளங்குதல் போன்ற பல நல்லறங்களை மக்கள் பெற்று நல்வழியில் நடத்தல் வேண்டும் என தலைவி வேண்டுபவளவாக இப்பத்து அமைந்துள்ளது.

மனிதனைப் பசி என்னும் பெருந்நோய் தொற்றின் காரணமாக அவன் தன்னுடைய இயல்பான குணத்திலிருந்து கீழிறங்கச் செய்யும் என்பதனை நன்கு உணர்ந்த பண்டைய மக்கள் உணவிடுவதைப் பொது அறமாகக் கொண்டு சிறந்து விளங்கினார்கள்.

“பசியில் லாகுக பிணிசே ணீங்குக”

என்றுரைத்து நாட்டில் பசி என்னும் ஒன்று இல்லாமல் மக்கள் அனைவரும் நோயின்றி மகிழ்வுடன் வாழ வேண்டும் எனக் கூறப்படுகிறது (Somasundaranaar, 2009).

அறம் செழித்து தீயவை என்னும் சொல்லே நாட்டைவிட்டு அகல வேண்டும் என்பதையும் சுட்டுகின்றன. அரசு திறம்பட செயல்பட்டால் தான் மக்கள் நல்வாழ்வு வாழ முடியும். மக்களை செம்மையாக வழிநடத்தும் நாட்டில் மும்மாரி மழை பெய்து மக்களும், அரசும் வளமுடன் வாழும் என்பதை தோழியின் கூற்று வழியாக தலைவியின் உளப் பண்பை விளக்குகிறார் ஓரம்போகியார்.

“வாழி யாதன் வாழி யவினி

நெற்பல பொலிக பொன்பெரிது சிறக்க”

“விளைக வயலே வருக விரவல”

“பால்பல வூறுக பகடுபல சிறக்க”

களவு, கற்பு என இருநிலைகளிலும் தலைவனைப் பிரிந்திருந்த தலைவி தன்னுடைய நலனைப் பற்றி சிறிதும் எண்ணாமல் நாடு, நாட்டு மக்கள், நாட்டை ஆளும் அரசன், வேளாண்மை, இரவலருக்குக் கொடுக்கும் பண்பு, அறத்தின் வழி வரும் மேன்மை எனப் பல பொது அறப்பண்புகளை இறையிடம் வேண்டுவளாக விளங்குகிறாள். வேட்கைப்பத்து என்னும் பத்தின் வழியாக தலைவியானவள் பொது அறத்தை விரும்பும் பொதுவுடமைச் சிந்தனையாளராக விளங்குவதை அறிந்து கொள்ள முடிகின்றது. அறத்தில் ஆழ்ந்த பற்றுள்ளம் கொண்டவள் தலைவி ஆதலினால் அறங்கள் சிறத்தலையே விரும்பி வாழ்ந்தாள் என்பது ஐங்குறுநூறு வாயிலாகப் புலப்படுகிறது (Somasundaranaar, 2009).

## ஈகை

உலகில் தம்முடன் வாழும் சகமனிதனுக்கு இல்லாதவற்றைக் கொடுத்து வாழ்வதே ஈகையாகும். மன்னன் முதலான பெருங்குலத்தோர் இல்லை எனவரும் இரவலருக்குத் தேவையான

பொருட்களைக் கொடுத்து மகிழ்ந்தனர். ஈகையின் சிறப்பை மக்களுக்கு உணர்த்தும் வகையில் வள்ளுவரும் 'ஈகை' என்னும் அதிகாரத்தைப் படைத்து மக்களுக்குக் கொடுப்பதனால் உண்டாகும் நன்மையையும், இன்பத்தையும், புகழையும் வலியுறுத்தி உள்ளார்.

"இலன் என்னும் எவ்வம் உரையாமை ஈதல்

குலனுடையான் கண்ணே உள"

என்னும் குறள் ஈகையை உணர்த்துகிறது (Murugan, 2014).

மன்னனை வாழ்த்திப் பாடிய வேட்கைப் பத்து பாடல்களில் வேளாண்மை சிறப்பைக் கூறிய ஓரம்போகியார் மருத நிலத்தில் விளைந்த பொருட்களைப் பெறுவதற்காக இரவலர்கள் தங்கள் நாடுகளுக்கு வருதல் வேண்டும் என்று விரும்புகிறார்.

"விளைக வயலே வருக விரவில"

"அறநனி சிறக்க வல்லது கெடுக"

இவ்வரிகள் பண்டைய தமிழர்கள் பிறருக்குக்கொடுத்து உதவும் மனப்பான்மையை கொண்டவர்கள் என்பதை அறிவதுடன் நம் முன்னோர்களின் வழியை நாமும் பின்பற்றி ஈகை உணர்வை பெற்று மகிழ்வுடன் வாழ சங்கப்பாடல்கள் நம்மை ஊக்குவிக்கின்றன என்பதையும் அறிய முடிகிறது (Somasundaranaar, 2009).

## இல்லற நெறி

நல்ல அறங்களை புரிவதற்கு இல்லறமும் மிக முக்கிய காரணமாகும். மனம் ஒத்த தலைவனும், தலைவியும் வரைவிற்குப் பிறகு பேணும் சிறந்த அறங்களில் ஒன்று இல்லறம். இல்லறத்தை மேற்கொள்ளும் தலைவியானவள் தன் தலைவன் தன்னை விட்டு சில காரணங்களால் பிரிய நேரிட்டாலும் தன் தலைவனை மற்றவர்கள் குறை கூறுதல் கூடாது என்ற வாழ்க்கை நெறிமுறையைக் கொண்டிருந்தாள்.

"இருங்கழிச் சேயிறா வினப்புள் ளாருங்

கொற்கைக் கோமான் கொற்கையம் பெருந்துறை

வைகறை மலரு நெய்தல் போலத்

தகைபெரி துடைய காதலி கண்ணே"

என்ற நெய்தல் திணை பாடலானது விருந்து வாயிலாக மனை புகுந்த தலைமகன் தலைமகளின் இல்வாழ்க்கைச் சிறப்பை கண்டு மகிழ்கிறான் என்பதை விளக்குகிறது (Somasundaranaar, 2009).

இல்வாழ்க்கை என்னும் இல்லறம் சிறக்க தலைவனும், தலைவியும் இரு உடல் ஓருயிர் போல சிறப்பாக வாழ்வதே நல்வாழ்க்கையாகும். தன் கணவன் வெளியில் சென்று எந்நிலையில் திரும்பினும் அவனை ஏற்று அரவணைப்பதே மனையாளின் இல்லற நெறிக்கு அடிப்படை பண்பாகும்.

"மறியிடைப் படுத்த மாண்பினை போல

புதல்வ னடுவண னாக நன்று"

இப்பாடலில் மான் தன் பிடியுடன் அன்பால் பிணைக்கப்பட்டு இருப்பதுபோல தம் மகள், தலைவன் இருவருக்கும் இடையே புதல்வன் படுத்துள்ள காட்சியைக் காட்டி இல்லறமே நல்லறம் என்ற கருத்தை செவிலித்தாய் நற்றாய்க்கு கூறும் வகையில் பேயனார் முல்லைத் திணைப் பாடலை காட்சிப்படுத்தியுள்ளார் (Somasundaranaar, 2009).

செவிலித்தாயின் உவகைக்கும், நற்றாயின் மகிழ்விற்கும் அடிப்படையாக அமைவது தலைவி மேற்கொள்ளும் இல்லறப்பண்பே எனில் அது மிகையாகாது.

ஒரு மனிதனுக்கு இல்லறம் சிறந்து விளங்கினால் வீடும், நாடும் சிறக்கும். சிறப்பான இடத்தில் நல்ல அறச் சிந்தனைகள் தோன்றும். அது நல்லதொரு சமூகத்திற்கு வழிவகுக்கும். ஆகவே, நல்ல இல்லறமே அறத்திற்கு முதல்படி என்பதை இதன்வழி அறியலாம்.

## விருந்தோம்பல்

சங்கத்தமிழ் இலக்கியங்கள் யாவும் காதல், வீரம், கொடையை மட்டுமின்றி இல்லறத்திற்குரிய அறங்களுள் ஒன்றான விருந்தோம்பலையும் சிறப்பித்துக் கூறுகின்றன. இல்லறத்தில் கணவனும், மனைவியும் இணைந்து ஆற்ற வேண்டிய மிகமுக்கிய அறங்களில் ஒன்று விருந்தோம்பல் ஆகும். பழந்தமிழர்கள் விருந்தோம்பலை நம் வாழ்க்கையின் உயிர்நாடியாகக் கொண்டு விளங்கியமை அக்கால நூல்களால் நமக்கு நன்கு புலனாகிறது.

"விருந்தே தானே

புதுவது கிளந்த யாப்பின் மேற்றே"

என்ற நூற்பாவானது 'விருந்து' என்பதை 'புதுமை' எனக் கூறுகிறது. அதாவது, இன்றைய வாழ்வில் நாம் தாய்வழி, தந்தை வழி உற்றார்களையும், உறவினர்களையும், நண்பர்களையும் விருந்து என்று அழைக்கின்றோம். ஆனால் அக்கால மக்கள் முன்பின் அறியாதவர்களையும் வீடு தேடி வருபவர்களையும் விருந்தினர் என்றே கூறினர் (Subash Chandrabose, 2018).

விருந்தினரைக் கண்டால் அகமும் முகமும் மலர்ந்து வரவேற்கும் தமிழர்களின் சிறந்த மாண்பினை,

"எமக்கே வருகதில் விருந்தே சிவப்பாளன்று

சிறியமுள் எயிறு தோன்ற

முறுவல் கொண்ட முகங்காண் கம்மே"

நற்றிணை பாடல் நமக்கு பகர்கின்றது (Balasubramaniyan, 2011). சங்க காலத்தில் இக்காலம் போல் உணவு விடுதிகள் இல்லாதக் காரணத்தினால் வாணிகத்திற்காகவோ அல்லது பிறவினைகளுக்காகவோ மற்ற இடங்களுக்குப் பயணம் செல்வோரை மக்கள் தங்கள் இல்லங்களில் தங்க வைத்து உணவளித்து உபசரிப்பது விருந்து எனப்பட்டது. இரவு நேரங்களில் விருந்தினர் எவராவது உண்டா என்று வாயிலைப் பார்த்து பிறகு கதவை அடைத்தனர் என்ற பண்டைத் தமிழரின் வழக்கத்தை சங்கப்பாடல் வழியாக அறிய முடிகிறது.

இல்லறத்தை பேணும் தலைவியின் சிறந்த கடமைகளுள் ஒன்றாக விருந்தினரைப் போற்றுதலை தொல்காப்பியம் குறிக்கிறது.

"விருந்து புறந்தருதலம் சுற்றம் ஓம்பலும்

பிறவும் அன்ன கிழவோள் மாண்புகள்"

கற்பு வாழ்வில் கணவனும், மனைவியும் இல்லத்தில் விருந்தோம்பும் பண்பானது சங்க காலத்தில் அறமாகவே போற்றப்பட்டது (Subash Chandrabose, 2018).

அரசனின் கட்டளைகளை நிறைவேற்றுதலே இல்லறத் தலைவனின் கடமைகளுள் முக்கியமான ஒன்றாகும். போர்வினையை மேற்கொள்ளும் தலைவனானவன்,

"விருந்துநனி பெறுதலு முரியண் மாதோ

விருண்டு தோன்று விசும்பி னுயர்நிலையுலக"

பாசறையில் தங்கியபோது அரசனின் போர்வினை முற்றுப்பெறாமல் நான் இங்கேயே இருப்பினும் தலைவியனாவள் என்னை பிரிந்த துயரத்தைத் தாங்கிக் கொண்டு விருந்தினரின் வருகையை எண்ணி மகிழ்ந்து அவர்களுக்கு அமுது படைப்பாள் என எண்ணுகிறான் (Somasundaranaar, 2009).

முல்லைத் திணையை இயற்றிய பேயனாரின் 'பாசறைப்பத்து' இல் துயரத்தில் இருப்பினும் வந்த விருந்தினரை வரவேற்று உபசரித்து தலைவி மகிழும் விருந்தோம்பல் பண்பைப் புலப்படுத்துகிறது. விருந்தோம்பலை இல்லற மகளிர் தம் கடமையாக ஏற்றுச் செய்ததை சங்க இலக்கியப்பாக்கள் தமக்கு விளக்குகிறது.

விருந்தோம்பல் என்பது இல்லற நெறியில் மட்டுமல்லாமல் இல்லறத்தார் ஆற்றும் அறமாகக் கருதாமலும் உணவு வேண்டிவரும் இரவலர் அனைவருக்கும் இல்லை எனக் கூறாமல் வழங்குவதே சிறந்த அறமாகும்.

## கடமை தவறாத தலைவன்

முல்லைக்கே உரிய பொழுதாகிய கார்காலம் தொடங்கியும் தலைவன் தலைவியோடு இணைந்து இல்லறத்தில் ஈடுபடாமல் மன்னன் ஏவுகின்ற தொழிலை விழுத்தொழில் எனக் கூறுவதன் வழியே தலைவன் கடமை தவறாத பண்பினை அறிய முடிகிறது.

"வேத்துவிடு விழுத்தொழி லொழிய

யான்றொடங் கினனா னிற்புறந் தரலே"

என்ற ஐங்குறுநூற்று பாடலானது விழுத்தொழிலை மேற்கொள்ளும் தலைவனைக் குறிப்பிட்டுள்ளது (Somasundaranaar, 2009).

வேந்தனின் ஆணையை நிறைவேற்ற வேண்டிய கடமையை உணர்ந்த தலைவன் நாடு, அரசன், குடிகள் என அனைவருக்காகவும் செய்யும் தொண்டானது தலைவனின் கடமை உணர்ச்சியை வெளிக்காட்டுவதோடு மட்டுமின்றி தன்னலம் கருதாது உழைக்கும் பண்பினையையும் எடுத்துக்காட்டுகிறது.

## மன்னரின் போர் அறம்

பழந்தமிழகத்தை ஆண்ட மன்னர்கள் யாவரும் போர் முரசு ஒலித்து, நாள் குறிக்கப்பட்ட பின்னரே அரச நெறிமுறைகளை தவறாது போர்புரிந்தனர். எதிரி நாட்டை மறைந்திருந்து தாக்குதல் செய்வதோ, இரவில் போர் நிகழ்த்துவதோ நிகழா வண்ணம் போரறங்களை காத்து வந்தனர். இவ்வாறு செய்வதையும் இழிவாகக் கருதினர். அந்தணர், பெண்கள், பிணியுற்றோர், வயோதிகர்கள் மீது போர்த் தாக்குதல் நடவா வண்ணம் போர்புரிந்தனர். வீரர்களைப் போருக்கு அழைக்கவும், வீட்டுக்கொருவர் நாடு காக்க முன் வர வேண்டும் என்பதனை எல்லாம் அறிவுறுத்த போர் முரசு முழங்கியது.

போருக்குத் தலைமையேற்ற மன்னர் போரின் மீதுள்ள விருப்பம் காரணமாக போர்த் தொழிலை தொடர்ந்து நடத்தினார். மழை வந்த பொழுதிலும் அம்மன்னன் போர்த்தொழிலை நிறுத்தவில்லை. இதனை,

"தழங்குரன் முரசங் காலை யியம்பக்

கடுஞ்சின வேந்தன் றொழிலெதிர்ந் தனனே

மெல்லவன் மருங்கின் முல்லை பூப்பப்

பொங்குபெயற் கனைதுளி காரெதிர்ந் தன்றே"

என்ற பாடல் வரிகளால் மன்னன் போர் மீது கொண்டுள்ள பற்றையும், மன்னனுக்காக போர்த் தொழிலை மேற்கொள்ளும் தலைவனின் கடமையறமும் புலனாகிறது (Somasundaranaar, 2009).

தலைவனோ போரை அறிவிக்கும் முரசொலி சத்தம் கேட்கும்பொழுது எல்லாம், தன் படைகளோடு தலைவியைப் பிரிந்து மன்னனுக்குத் துணையாக போர் முனைக்கு சென்று விடுவான். பலகாலம் இவ்வாறே போர்க்களம் செல்வதும் மீள்வதுமாக இருப்பவன். தலைவன் மன்னனுடன் சேர்ந்து பகைநாட்டை வென்று மன்னன் போரினைத் தவிர்த்த நிலையில் தலைவியுடன் நீண்டநாள் இல்லறத்தில் மகிழ்ந்து வாழ்கிறான். மேலும், தலைவியின் உள்ளமோ தலைவன் மீண்டும் பிரிவானோ என்னும் ஏக்கத்தில் கவலைக் கொள்ளுதலையும் அறிய முடிகிறது.

“வென்வேல் வேந்த னருந்தொதி றுறந்தினி

நன்னுதல் யானே செலவொழிந் தனனே

முரசுபா டதிர வேவி

யரசுபடக் கடக்கு மருஞ்சமத் தானே”

என்பதில் பேயனார் போர் முரசுகள் முழங்கத் தன் படையைப் பகைவர் மேல் செலுத்திப் பகை மன்னர் மாண்டொழியுமாறு வெற்றியை ஈட்டும் மன்னனின் போரறத்தை சிறப்பித்துக் கூறியுள்ளார் (Somasundaranaar, 2009).

“கதிரிலை நெடுவேற் கடுமான் கிள்ளி

மதில்கொல் யானையிற் கதம்புநெறி வந்த

சிறையழி புதுப்புன லாடுக

மெம்மொடு கொண்மோவெந் தோள்புரை புணையே”

சோழ மன்னான கிள்ளியின் வேலும், குதிரையும், யானைப் படையும் பகைநாட்டு மதிலை தகர்த்தெறியும் என்பதனை இப்பாடலானது விளக்குகிறது. வீரத்தையும், வீரம் சார்ந்த அறங்களையும், வீரத்தால் விளையும் அழிவினையும் அந்தக் காலமாந்தர்கள் தங்கள் பண்பாடாக போற்றியுள்ள தன்மையை ஐங்குறுநூறு புலப்படுத்தியுள்ளது (Somasundaranaar, 2009).

## அறத்தொடு நிற்றல்

அகத்துறைகளுள் ஒன்றான அறத்தொடு நிற்றல் என்பது களவு வாழ்க்கையை கற்பு வாழ்க்கையாக மாற்ற துணைபுரியும் ஓர் பாலமாகும். இன்றைய காலக்கட்டத்தில் பெண்கள் தன் காதலை வெளிப்படையாக பெற்றோரிடம் கூறிவிடுகிறார்கள். ஆனால், அன்றைய காலத்தில் ஒரு பெண் தன் காதலை வெளிப்படுத்த பல படிநிலைகள் இருந்தன. தலைவன் தலைவியின் அன்பு கலந்த களவு வாழ்க்கையை நிலைபெறச் செய்து கற்பு வாழ்க்கையாக மிளிரச்செய்வதே அறத்தொடு நிற்றலின் நோக்கமாகும். சுருங்கச் சொன்னால் களவைக் கற்பாக மாற்றும் அருஞ்செயலே அறத்தொடு நிற்றல் எனில் அது மிகையாகாது.

தலைவியின் அனைத்து நலன்களையும் காக்கக் கூடியவளாகவும், களவு வாழ்க்கைக்குத் துணை நிற்பவளாகவும் விளங்குபவள் தோழி. சங்க அகப்பாடல்களில் தோழிக்கென தனியிடமுண்டு. தலைவியின் வாழ்வில் இரண்டறக் கலந்த பாத்திரமாக விளங்கும் தோழி தலைவியின் களவை வெளிப்படுத்தும் இடங்களில் எல்லாம் அறத்தொடு நிற்பதை காண முடிகிறது.

செவிலித் தாயின் மகளான தோழி தலைவன் மேல் தலைவி கொண்ட காதலை இல்லில் விளக்கி தலைவனுக்கே மணம் முடித்துக் கொடுக்க வேண்டும் என்பதை வலியுறுத்துவாள். களவில் ஈடுபட்ட தலைவியின் மேனியானது மெலியுறுவதைக் கண்ட செவிலி முருகனை அழைத்து வெறியாடல் நிகழ்த்துவதற்கு முயல்கையில் தலைவியின் காதலைக் குறிப்பிட்டு அறத்தொடு நிற்பாள் தோழி.

ஐங்குறுநூற்றில், குறிஞ்சித்திணைக்குரிய அறத்தொடு நிற்றல் மருதத் திணையில் இடம்பெற்று திணைமயக்கத்தை ஏற்படுத்துகிறது. தலைவன், தலைவிக்கு இடையே உள்ள காதலை தெரிந்த ஒரே பெண்ணாக விளங்கும் தோழி வாயிலாகவே செவிலித் தாய்க்கும், செவிலித் தாய் நாற்றாயிடமும், நற்றாய் தலைவியின் தந்தையிடம் கூறுவதாக அமைந்துள்ளது. இவ்வாறு, ஒரு படிநிலையை அமைத்து உணர்த்தும் பாங்கு பண்டைய மாந்தர்களின் அறத்தொடு நிற்றல் என்னும் கோட்பாட்டை விளக்குகிறது. தலைவியின் காதலைத் தலைவியே தெரியப்படுத்துவதை நாகரிகமாகத் தமிழ் மக்கள் கருதவில்லை. எனவேதான் தோழி வாயிலாக அறத்தொடு நிற்றல் என்னும் அகத்துறையை சங்க இலக்கியத்தில் அமைத்திருக்கிறார்கள் (Somasundaranaar, 2009).

அறத்தொடு நிற்றல் என்னும் துறை சார்ந்த பத்துப்பாடல்களை நெய்தல் திணையை அம்மூவனார் 'தாய்க்கு உரைத்த பத்து' என்ற பாடல்கள் வழி தெரிவிக்கின்றார் (Somasundaranaar, 2009).

“அன்னை வாழிவேன் டன்னை முழங்குகடற்

றிரைதரு முத்தம் வெண்மண லிமைக்குந்

தண்ணந் துறைவன் வந்தெனப்

பொன்னினுஞ் சிவந்தன்று கண்டிசி னுதலே”

தோழி கூற்றாக அமைந்து இப்பாடலானது தலைவனைப் பிரிந்ததால் சோர்வும் தளர்ச்சியும் அடைந்த தலைவி (Somasundaranaar, 2009). தலைவன் வருகிறான் என்ற செய்தியை கேட்டதும் எவ்வளவு மகிழ்ச்சி கொள்கிறாள் என்பதை பாருங்கள் என்று கூறியும், தலைவி மகிழ்ச்சியாக இருக்க வேண்டும் என்று நீங்கள் விரும்பினால் அந்தத் தலைவனுக்கே அவளை மணமுடித்து வையுங்கள் என்று செவிலித் தாய்க்கு நுட்பமாக தம் மனக்கருத்தை உணர்த்துகிறாள் என்பதை காண முடிகிறது. மேலும், களவுக் காலத்தில் பொருள்தேடி சென்ற தலைன் திரும்ப வருவதற்குள் தலைவியை வரைந்து கொள்ள மற்றவர்கள் விருப்பம் தெரிவித்து வருவார்கள். அவ்வேளையில் தலைவியின் காதலைச் செவிலித் தாய்க்குச் சொல்ல வேண்டிய கடமை உடையவளாகிறாள் தோழி.

பெரும்பாலான அக இலக்கிய பாடல்களில் தோழியின் பண்பை விளக்கும் இடங்களில் எல்லாம் 'அறத்தொடு நிற்றல்' என்னும் பண்பு சிறப்பித்துக் கூறப்படுகிறது. இப்பண்பை தோழி வெளிப்படுத்தும் இடங்களில் எல்லாம் தோழியின் அறப்பண்பை மட்டும் அறியாமல் அவள் தலைவி மீது கொண்ட நட்பு, பாசம், பற்று முதலான பண்புகளையும் அறிய முடிகிறது.

அறத்தோடு நிற்றல் அகத்துறையாக இருந்தாலும் அறத்துடன் தொடர்புடையதாக அறியப்படுகிறது. ஏனெனில் தாய், தந்தை மனம் வருந்தாத வண்ணம் அதேநேரம் காதலை நாகரிகமாக தன் கடமையாக கருதி அறவழியில் தோழி தெரிவிக்கிறாள். இங்கு தலைவியின் பண்பு அறமாகப் பார்க்கப்படுகிறது. தோழியின் கடமையும் அறமாக பார்க்கப்படுகிறது.

## முடிவுரை

சங்க இலக்கியங்களில் அறம் வெளிப்படையாக வலியுறுத்தப்படுவதில்லை எனினும் பாடற்கருத்தோடு இயைந்த அறிவுறுத்தல்களாகவே விளங்குகின்றன. பண்டையத் தமிழர்கள் தனிமனித வாழ்க்கைக்கும், சமுதாய வாழ்க்கைக்கும் எனப் பல நல்லறங்களை வகுத்து அவ்வறங்களுக்கு கீழ் செம்மையுற வாழ்ந்தனர்கள். சங்க இலக்கியம் அறம் சார்ந்த அறநெறிகளை நீதி, கடமை, ஒழுக்கம், ஈகை, கொடை ஆகிய செயல்களின் வாயிலாக அறத்தை மக்களுக்குப் போதித்துள்ளது. சங்கப் புலவர்கள் உலகத்திலுள்ள உயிர்கள் அனைத்திற்கும் அன்பே அடித்தளப் பண்பாகும் என்று அறிவுறுத்தியுள்ளனர். விருந்தினரை உபசரித்தல், இரவலர்களுக்குக் கொடுத்தல் ஆகிய அறச்சிந்தனைகளை ஐங்குறுநூறு போற்றுக்கின்றது. மன்னன் நாட்டு மக்களைத் துன்பமின்றிக் காப்பதையும், அவன் ஆட்சியில் வேளாண்மை சிறந்து விளங்கி மக்கள் வளமுடன் வாழ்ந்தனர் என்பதையும் ஐங்குறுநூறு புலப்படுத்தி உள்ளது. ஐங்குறுநூறு கூறும் அறச்சிந்தனைகள் வழி சமூகம் செயல்படின் அது சிறப்பாக மேன்மையுறும் என்பதில் ஐயமில்லை.

## References

Balasubramaniyan, K.V. (2011) Nattrinai, New Century Book House, Chennai, India.

Chidambaram, (2008) Ettuthogai Tamilar Panpadum, Arivu Pathippagam, Chennai, India.

Murugan, P. (2014) Thirukkural Thiruvukol, New Century Book House, Chennai, India.

Ramalingam, N.E. (2003) Araththin Aachi, Thiruvalluvar Pathippagam, Chennai, India.

Sivagami, S. (1991) Ilakkiya porut pakupaaivu (Bhakthiyum Aramum), International Institute of Tamil Studies, Chennai, India.

Somasundaranaar, P.V. (2009) Ainkurunuru, Tirunelveli Thenninda Saivva Sidhandha Noorpathipu Kazhagam, Tirunelveli, India.

Subash Chandrabose, S. (2018) Tholkappiyam-porul, Eyal Pathippagam, Thanjavur, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License